## பயிற்சிகள்.

வணக்கம் மாணவர்களே,

கீழே கொடுக்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் எழுதி தொலைவரியில் அனுப்பவும். இது இவ்வாரத்திற்கான பாடம். அதனால், இக்கேள்விக்கான பதிலை வெள்ளிக்கிழமைக்குள் அனுப்பி விடவும். அதோடு, இத்தலைப்பையொட்டி கலந்துரையாட கூகுள் கூடலில் (Google Meet) செவ்வாய் இரவு **8.30** மணியளவில் சந்திப்போம். அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

நன்றி, மாணவர்களே.

[எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்.]

## பாகம் - ஒன்று

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

### பிரிவு ஒன்று : கவிதை

உன்னுடன் இணைந்தே பிறந்தமொழி – உன்
உள்ளமும் உணர்வும் புரிந்தமொழி
எண்ணியல் என்ன மின்னியல் என்ன
எதையும் பயின்றிடச் சிறந்தமொழி – அது
இறைவன் உனக்கென வரைந்தமொழி!

தமிழினம் எய்திய பெரும்பேறு – அது
தாய்மொழி தமிழெனும் அரும்பேறு
**அமிழ்தினை** உரிமை அடைந்தவர் யாரும்
அருந்தா திருந்தால் அவப்பேறு – தமிழ்
அமிழ்தம் அருந்துதல் தவப்பேறு!

(இறையருட் கவிஞர் செ.சீனி நைனா முகம்மது)

1. இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **மையக்கரு** யாது? (2 புள்ளி)

2. இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **நயங்கள்** இரண்டனை எழுதுக. (4 புள்ளி)

3. (i) **அமிழ்தினை** என்பதன் **பொருள்** யாது? (2 புள்ளி)

   (ii)

   > தமிழினம் எய்திய பெரும்பேறு – அது
   > தாய்மொழி தமிழெனும் அரும்பேறு
   > அமிழ்தினை உரிமை அடைந்தவர் யாரும்
   > அருந்தா திருந்தால் அவப்பேறு

   இவ்வடிகளில் தமிழினம் ஏன் **பெரும்பேறு பெற்றவர்களாகக்** கருதப்படுகின்றனர்? (2 புள்ளி)

[10 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

4. கவிச்சக்கரவர்த்தி நாடக ஆசிரியரின் **அடையைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

5. (i) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் **புலவர்கள்** இருவரைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

   (ii) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தின் **இடப்பின்னணி** இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

6. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> கூத்தர் : குலோத்துங்கா, நான் அஞ்சிப் பின் வாங்கவில்லை. மூன்றே மாதங்களில் ராமாயணத்தை இயற்றி அரங்கேற்றுகிறேன்.
>
> சோழன் : அப்படிச் சொல்லுங்கள். ஆஹா... மூன்று மாதங்களில் தமிழ் ராமாயணத்தைக் கண்ணாரக் காணப் போகிறேன். இந்தத் தமிழகமும் காணப் போகிறது. கம்பரே நீங்களும் மறுக்கக்கூடாது. நீங்களும் ஒரு ராமாயணத்தை இயற்றித்தான் ஆக வேண்டும். கூத்தர் காவியம் அரங்கேறிய பின் உங்கள் காவியத்தின் அரங்கேற்றம் நடைபெற வேண்டும். **இது என் அன்புக் கட்டளை.**
>
> கம்பர் : சக்கரவர்த்தி! ராமகாதை இயற்றுமாறு எந்தக் கட்டளையும் இட வேண்டியதில்லை. தடிகொண்டு அடித்தா ஸ்வர்க்கத்திற்கு விரட்ட வேண்டும்.
>
> சோழன் : அப்புறம் ஏன் தயங்குகிறீர்கள்?
>
> கம்பர் : இனித் தயங்க மாட்டேன். கூத்தரே துணிந்த பின் நான் ஏன் தயங்க வேண்டும்? மூன்று மாதங்களில் எனது நூலும் அரங்கேறும்.
>
> (அங்கம் 1, காட்சி 5, பக்கம் 45-46)
> (பாரி நிலையம் 2015)

(i) இச்சூழலில் சோழனின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **மொழிநடை** ஒன்றனை எழுதுக. (2 புள்ளி)

(iii) **இது என் அன்புக் கட்டளை** என்பதன் **சூழலுக்கேற்ற பொருள்** யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

## பிரிவு மூன்று : நாவல்

7. அகல்விளக்கு நாவலாசிரியரின் **கொள்கைகளுள்** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

8. (i) அகல்விளக்கு நாவலின் **துணைக்கதைப்பாத்திரம்** இருவரைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

   (ii) அகல்விளக்கு நாவலின் கதைப்பின்னலின் **உச்சத்தினைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

9. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> "சே இவ்வளவுதானா நீ! கிராமத்துப் பையன் ஒருவன் வாங்குகிற மார்க்கும் நீ வாங்கவில்லையே, நீ எப்படி முன்னுக்கு வரப் போகிறாய்?" என்று வெறுத்தார்.
>
> "எல்லாவற்றிலும் பாஸ் மார்க் வாங்கியிருக்கிறேன் பார்" என்று சொன்னேன்.
>
> அதுபோதுமா'டா உனக்கு வேறு என்ன வேலை? மளிகைக் கடைக்கு வரச்சொல்லி ஏதாவது வேலை வைக்கிறேனா? அரிசி பருப்பு அளந்து போடச் சொல்கிறேனா? புளி மிளகாய் நிறுத்தப் போடச் சொல்கிறேனா? அல்லது வீட்டில் உங்கள் அம்மா ஏதாவது வேலை வைக்கிறாளா? உன் படிப்புக்கு என்றே எல்லா ஏற்பாடும் செய்கிறோம். **நீ இந்தக் கதியாக இருக்கிறாய்.** பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்கு வந்தவுடன் காற்றாடி, பம்பரம், புள், கோலி என்று ஆடப் புறப்பட்டுவிடுகிறாய்.
>
> (அத்தியாயம் 4, பக்கம் 43)
> (பாரி நிலையம் 2015)

(i) இச்சூழலில் வேலையனின் தந்தையாரின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **உத்தி** ஒன்றனை எழுதுக. (2 புள்ளி)

(iii) **நீ இந்தக் கதியாக இருக்கிறாய்** என்பதன் **சூழலுக்கேற்ற பொருள்** யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]